தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

திங்கட்கிழமை, 1981 ஏப்ரல், 27

சித்திரை 15, துன்மதி—திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உள்ள சட்டப்பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

“ பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின் ”

மயிலிறகு ஏற்றும் வண்டியேயானாலும் அந்தப் பண்டமும் அளவோடு ஏற்றாமல் அளவு கடந்து மிகுதியாக ஏற்றினால் அச்சு முறியும்.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

கொங்கர்குளம் கண்மாயில் மீன் பிடிக்கும் உரிமை.

*வினா எண் 889—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை கொங்கர்குளம் கண்மாயில் மீன் பிடிக்கும் உரிமையை அரசினர் பொது ஏலத்தில் விட உத்திரவிடுமாறு அக்குளத்தின் ஆயக்கட்டுதாரர்களிடம் இருந்து விண்ணப்பம் ஏதும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

வடாற்காடு மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம்.

* வினா எண் 890.—திரு. இல. பலராமன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தை கோட்டையிலிருந்து வேறு இடத்திற்கு மாற்ற அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எந்த இடத்திற்கு. மாற்றப்படும் ?

[1981 ஏப்ரல் 27

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) மற்றும் (ஆ) வருவாய் நிர்வாக ஆணையாளரின் முடிவான அறிக்கை 31—3—1981-ல் அரசுக்குக் கிடைத்துள்ளது. அது அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை கோட்டைக்கு வெளியே கட்டுவதாக அரசு இருக்கிறதா என்றுதான் கேள்வியே கேட்டிருக்கிறார்கள். அந்த ஏரியாவிலே உள்ள மக்களுடைய கோரிக்கை புதிதாக அந்த அலுவலகத்தைக் கட்டும்போது கோட்டைக்குள்ளேயே கட்டவேண்டும் என்பதுதான். அதற்கு உரிய முயற்சியை எடுத்தால் வாய்ப்பாக இருக்கும். அதனாலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த அலுவலகத்தைக் கோட்டைக்கு வெளியே கட்டாமல் உள்ளேயே கட்ட ஏற்பாடு செய்வார்களா? அது எப்போது கட்டப்படும்? அதற்கான மதிப்பீடு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, சில நேரங்களில் மக்களுடைய எண்ணங்களை நிறைவேற்ற முடியாத நிலைமை ஏற்படுகிறது. அதற்குக் காரணம் கோட்டை என்பது இன்றைக்கு நேற்று கட்டப்பட்டது அல்ல. கட்டப்பட்ட கட்டிடத்தின் அமைப்புகள் அழியக் கூடாது, மாறக்கூடாது என்பதற்கு இந்திய தொல்பொருள் இலாகா, அதிலே பல மாடி கட்டடங்கள் கட்டக்கூடாது என்று தெரிவித்து இருக்கிறது. பல மாடி கட்டடம் கட்டாமல், ஒரே மாடியாகக் கட்டுவதற்கு வேண்டிய இடம இல்லாமல் இருக்கிறது. ஆகவே அரசு அதைப்பற்றி பரிசிலித்து கொண்டிருக்கின்றது. அந்தக் கட்டடம் கட்ட முன்பணமாக 5 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடார்க்காடு மாவட்டத் தலைவர் அலுவலகம் இருக்கின்ற வேலூரிலே இருக்கின்ற அந்தக் கோட்டை அந்த இடத்தின் மையப் பகுதியாகும். அதுமட்டுமல்லாமல் அந்தக் கோட்டையின் உள்ளே நிறைய இடம் இருக்கின்ற காரணத்தினால் அரசு அதை மீண்டும் மறுபரிசிலனை செய்து அந்த இடத்தில் கட்ட ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, அது மத்தியப் பகுதியாக இருக்கின்றது என்பது எல்லோருக்கும் தெரியும், இடம் இருக்கின்றது என்பது, எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். ஆனால்

TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 27]

இருக்கின்ற இடம் கட்டடம் கட்டுவதற்குப் போதுமானதாக இருக்கிறதா, இல்லையா என்பதுதான் கேள்வி. கட்டிடம் கட்டப் போதுமான இடம் இல்லை என்பதுதான் அரசின் எண்ணம்.

திரு. ஏ. சி. சண்முகம்: தலைவர் அவர்களே, அந்தப் புதிய இடத்தில் கட்டிடம் கட்டும் வேலை எப்போது துவங்கப்படும்? தற்போது அந்த மாவட்டத் தலைநகரில் அரசு அலுவலகங்கள் தனித் தனி இடங்களில் இயங்கி வருகின்றன. அனைத்து அரசு அலுவலகக் கட்டிடங்களையும் ஒரே இடத்தில் கட்டும் வகையில், இந்தப் புதிய கட்டிடம் கட்டும்போது அரசு மேற்கூறிய ஏற்பாடு செய்யுமா? (பதில் இல்லை).

கூட்டுறவு பிரதம நிலவள வங்கிகளில் பணிபுரியும் ஊழியர்கள்.

* வினா எண். 891—திரு. கு. ரமணி: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள கூட்டுறவு பிரதம நிலவள வங்கிகளில் பணி புரியும் மொத்த ஊழியர்கள் எவ்வளவு?

(ஆ) அவர்களுக்கு பணிப்பாதுகாப்பும், வரையறுக்கப்பட்ட பணி நிலைமைகளும் உள்ளனவா?

(இ) ஆம் எனில் அவைகள் பற்றிய விவரங்கள் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) 1,810 ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர்.

(ஆ) ஆம்.

(இ) பிரதம நிலவள வங்கிகளில் ஊழியர்களின் பணி நிலைமைகள், பணி பற்றிய தனித்துறை விதிகளில் நிர்ணயிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவ் விதிகளில், ஒவ்வொரு வகைப் பணியாளர்களுக்கும் இருக்க வேண்டிய கல்வித் தகுதி, வயது வரம்பு, நியமனம் செய்யும் முறை, பணி நிரந்தரம் செய்தல், சேமநலநிதி, ஓய்வு பெறும் வயது, ஒழுங்கு நடவடிக்கை கோட்பாடுகள் முதலியவை பற்றிய நெறிகாட்டி முறைகள் வரையறுக்கப் பட்டுள்ளன.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்த ஊழியர்களுக்குப் பணி பாதுகாப்பு விதிகள் அமலாக்கப்பட்டு வருகின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பணி பாதுகாப்பு என்கிறபோது அவர் களுக்குக் கிடைக்கவேண்டிய ஊதியமும் ஒரு அம்சமாக இருக்கிறது. ஆகவே, அவர்களுக்குக் காலாகாலத்தில் கிடைக்கவேண்டிய மாதச் சம்பளம் 927 பிரதம

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS